4

JB
031,3x
N52
177707

154

ROVED BY THE TEXT-BOOK COMMITTEE, MADRAS.

ÆSOP'S - -
- - FABLES

TAMIL - PART - I

JUL 1932

Varakavi-Tiru
A. SUBRAMANYA BHARATI

LALITA VILAS BOOK DEPOT
TRIPLICANE :: MADRAS.

TB
031,3x
N32
177707

154

உ

ஈஸாப் இயற்றிய

நீதிக் கதைகள்

வரகவி - திரு - அ. சுப்ரமண்ய பாரதி
எழுதியது

5 - JUL 1932

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

லலிதா விலாஸ் புஸ்தகசாலை
திருவல்லிக்கேணி : : சென்னை

பதிவு செய்தது] [விலை அணா 3.

Approved by the Text book Committee.
Vide Page 227, Dated 8th April 1930.

177707

2877
894.813

ஈஸாப் இயற்றிய

நீதிக்கதைகள்



1. ஒன்றுபட்டா லுண்டுவாழ்வு

மலையோரத்தில் ஒரு காட்டில் சில எருதுகள் வழக்கமாய்ப் மேய்ந்து கொண்டிருந்தன. அவை களை மலைமேலிருந்த ஒரு சிங்கம் பார்த்தது. பார்த்

ததும் "இவைகளில் ஒன்றையேனும் கொன்று புசித்தால்தான் என்பசி தணியும்" என்றெண்ணி அதற்குச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தது.

எருதுகள் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாமல் சேர்ந்தே மேய்ந்தன. அதனால் அவற்றினிடம் போவதற்குச் சிங்கம் பயந்தது. சிங்கம் வெகு நேரம் காத்திருந்தது. அவைகள் ஒன்றைவிட்டு ஒன்று பிரிவதாய்த் தெரியவில்லை. அதனால் சிங்கம் "நாளையதினப்பார்ப்போம்" என்று போய் விட்டது.

எருதுகள் மறுநாளும் ஒன்று சேர்ந்தே மேய்ந்தன. சிங்கம் இவைகளை எந்த விதத்தில் பிரிக்கலாம் என்று ஆலோசித்தது; ஏதாவது தந்திரத்தினலேதான் பிரிக்கவேண்டுமென்றுஎண்ணியது. பின் அது ஒரு பூனையைப்போல் அவைகளின் முன் போய், ஒன்றினிடம் ஒன்றைப்பற்றித் தாழ்வாகப் பேசியது. அதனல் அவைகளுக்குள்ளிருந்த ஒற்றுமை கலைந்தது. பிறகு அவைகள் ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்து தனித்தனியே மேயத் தொடங்கியது. தன் தந்திரம் பலித்தபடியால் சிங்கம் சந்தோஷமடைந்து அவைகளை ஒவ்வொன்ருகக் கொன்று தின்று கொழுத்தது.

2. ஒற்றுமையின் மேன்மை

ஒருவனுக்கு நாலைந்து பிள்ளைகள். அவர்களெல்லோரும் அடிக்கடி சண்டை சச்சரவு செய்துகொண்டிருந்தார்கள். அவ்வாறு சண்டை சச்சரவு செய்யாமலிருக்கும்படி தந்தை அவர்களுக்குப் பலவிதத்திலும் புத்தி சொல்லிப் பார்த்தான்.

அவர்கள் தந்தையின் சொல்லைக் கேட்கவில்லை. அப்பால் அவன் அவர்களை அழைத்து ஒரு கட்டு சுள்ளிக்குச்சி கொண்டுவரும்படி சொல்லி, அவைகளை ஒன்றாய்ச் சேர்த்துக்கட்டி ஒருவனிடம் கொடுத்து "இதனை இப்படியே

பிடித்து முறி பார்க்கலாம்" என்ருன். அவன் தன் பலம் கொண்டமட்டும் முயன்று அதை முறிக்கப் பார்த்தான். முடியவில்லை. அதனுல் அவன் "இதை என்னுல் முறிக்க முடியாது" என்று சொல்லிவிட்டான்.

தந்தை பிறகு அந்தக்கட்டை இன்னெருவனிடம் கொடுத்தான். அவனும் தன்னுலியன்ற மட்டும் முயன்று அதை முறிக்கப்பார்த்தான். முடியவில்லை. இவ்வாறே ஒவ்வொருவரும் முயன்று முடியாதெனச் சொல்லி விட்டனர்.

அப்பால் தந்தை அக்கட்டை அவிழ்த்து "இப்பொழுது இதனை நீங்கள் தனித் தனிக் குச்சியாக முறியுங்கள்" என்ருன். அவர்கள் அதை வெகு எளிதில் முறித்துவிட்டார்கள்.

அப்பொழுது தந்தை அவர்களை நோக்கி, "இந்தச் சுள்ளிகள் ஒரு கட்டாய்ச் சேர்ந்திருந்த பொழுது இதை முறிக்க உங்களால் முடியவில்லை. இவை தனித்தனியே ஆனதும் வெகு சுலபமாக முறித்து விட்டீர்கள். ஆகையால் நீங்களெல்லோரும் சண்டை சச்சரவில்லாமல் ஒன்ருகச் சேர்ந்திருந்தால் உங்களை உங்கள் பகைவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. பிரிந்தீர்களானுல் உங்களை உங்கள் பகைவர்கள் வெகு சுலுவிலே ஒழித்து விடுவார்கள். நீங்கள் சண்டை சச்சரவில்

லாமல் ஒற்றுமையாய் இருந்துவரும் வழியைக் கவனித்து நடவுங்கள்" என்று புத்திமதி கூறி ஞன்.

பிள்ளைகள் "அப்படியே நடக்கிறோம்" என்று சொல்லி வந்தனம் செய்து சந்தோஷ மடைந்து, அன்றுமுதல் ஒற்றுமையாய் இருந்து மேன்மை யடைந்தனர்.

---

3. சச்சரவின் பயன்

வெய்யில் காலத்தில் ஒரு நாள் வியாபாரி ஓர் ஊரிலிருந்து வேறோர் ஊருக்குப் போகவேண்டியதா யிருந்தது. அவன் ஒரு கழுதையை ஒருவனிடமிருந்து வாடகைக்கு அமர்த்திக்கொண்டு அதன் மீதேறிச் சென்றான் அந்தக் கழுதை யின் பாகன் அதன் கூடவே நடந்து வந்தான். கொஞ்சதூரம் போனதும் வியாபாரி கழுதையிலிருந்து கீழே இறங்கிப் பாகனைப் பார்த்து, "அப்பா! இதனுடைய நிழலில் சற்று உட்கார்ந்திருந்து பிறகு புறப்படுவோம்" என்று கூறிக் கழுதையின் நிழலில் உட்கார்ந்தான்.

பாகன் :—"நீர் இதன் நிழலிலே உட்காருவது கூடாது, இந்த இடம் என்னுடையது" என்றான்.

வியாபாரி:—"எப்படியப்பா உன்னுடையது? நான் வாடகைக்கு வாங்கியுள்ள கழுதை யல்லவா இது? என் பிரயாணம் முடிந்த பிறகு கழுதை உன்னுடையது. அது வரையில் என் கழுதை இது. என் கழுதையின் நிழலில் நானிருக்கிறேன். உனக்கென்ன அதனால்?" என்று கேட்டான்.

பாகன்:—"நீர் கழுதையை வாடகைக்குக் கொண்டீரே ஒழிய அதன் நிழலையும் வாங்கவில்லையே!" என்றான்.

பிறகு இருவருக்கும் சச்சரவு உண்டாயிற்று. இந்தச் சமயம் பார்த்துக் கழுதை ஆளைக்கண்ட நரிபோல் நாலுகால் பாய்ச்சலில் ஓடிவிட்டது.

---

4. இருவர் சண்டை மூன்றாமவனின் மகிழ்ச்சி

ஒரு காட்டில் ஒரு மான்குட்டி இறந்து கிடந்தது. அதை அந்த வழியே போன சிங்கமும் கரடியும் கண்டன. கண்டதும், அதற்காக இரண்டும் சண்டையிட்டுக் கொண்டன. தோல்வி வெற்றி யில்லாமல் இரண்டும் வெகுநேரம் கட்டிப் புரண்டு எழுந்து குதித்து ஓடிப் பதுங்கிப் பாய்ந்து சண்டை செய்தன. அதனால் இரண்டும் பலவீனமடைந்து களைத்துப்போயின. முடிவில் கீழே விழுந்து இரண்டும் சோர்வடைந்து விட்டன.

அந்தச் சமயத்தில் ஒரு நரி அங்கே வந்தது. சிங்கத்தைக் கண்டால் நரி ஒரே ஓட்டமாய் ஓடிப் பதுங்கிக் கொள்ளும். அதற்குச் சிங்கத்தினிடத்தில் அவ்வளவு பயம். அப்படிபட்ட நரி, சிங்கமும் கரடியும் சோர்ந்திருப்பதைக் கண்டதும், ஒரே பாய்ச்சலில் சடக்கென்று அவைகளுக்கு நடுவே பாய்ந்து மான் குட்டியைக் கவ்விக் கொண்டு ஓடிவிட்டது.

அதைக்கண்ட அவைகள் "ஆகா, நாம் என்ன காரியம் செய்தோம்? வீணே மதியீனத்தினுல் சண்டையிட்டுப் பலத்தை இழந்தோம். உடம்பைக் கெடுத்துக் கொண்டோம். ஓர் அற்பனுக்கு விருந்தளிக்கவா நாம் இப்படிச் செய்தோம்? சை! பல மிருந்து என்ன பயன்? முன் ஆலோசனை வேண்டும்" என்று பேசிக்கொண்டு தங்கள் வழியே சென்றன.

---

5. கர்வம் ஆபத்தை விளைவிக்கும்

ஒருநாள் ஒரு குப்பைமேட்டிலிருந்த இரண்டு சேவல்கள் ஒன்றோடொன்று வெகு பலமாய்ச் சண்டை போட்டுக்கொண்டன. இரண்டிற்கும் உடலெல்லாம் காயமுண்டாய் இரத்தம் பெருகியது. வெகு நேரத்திற்கப்பால் ஒன்று தோல்வி

யடைந்தது. உடனே அது குப்பைமேட்டி லிருந்து இறங்கிக் கூண்டிலே போய்ப் பதுங்கிக் கொண்டது.

ஜயமடைந்த சேவல் ஜயித்தோமேன்ற சந் தோஷத்தினுல் அந்தக் கூண்டின்மேல் பறந்து உட்கார்ந்துகொண்டு 'கொக்கோ' என்று கொக்கரித் தது. அப்பொழுது, கழுகொன்று உயரப் பறந்து கொண்டிருந்தது. சேவல் கூவியது அதன் செவியில் கேட்டது. கேட்டதும் அது ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து அதை தூக்கிக்கொண்டு போய்விட்டது. பிறகு தோற்ற சேவல் வெளியே வந்து அந்தக் குப்பைமேட்டில் ஏறிக்கொண்டது.

எப்போதும் கர்வமடைவது கூடாது. கர் வம் ஆபத்துக்கிடமாகும்.



6. வீண் டம்பம் வெட்கந் தரும்

ஒரு காட்டில் ஒரு வான்கோழி இருந்தது. அது ஒரு நாள் தான் மேயப்போன இடத்தில் சில மயிலிறகுகளைக் கண்டது; அவைகளைப் பொறுக்கித் தன் இறகுகளுக்கு நடுவே சொருகிக் கொண்டு தன்னை மயிலாகவே எண்ணிக் கொண்டது. அதனால் அது தன் இனத்தைச் சார்ந்த கோழிகளை யெல்லாம் வெறுத்துவிட்டு மயில்களோடு சேர்ந்து கொண்டது.

மயில்கள் ஒரு நொடியில் அதை வான்கோழி யென்று கண்டுகொண்டன. உடனே அவைகள் அந்தக்கோழியின் இறகுகளைக் கொத்திப் பிடுங்கித்

துரத்திவிட்டன. பிறகு வான்கோழி தன் இனத்தினிடம் வந்து சேர்ந்தது. வான்கோழிகள் முன் அது தங்களை வெறுத்ததை மனத்திலெண்ணி ஒன்று சேர்ந்துகொண்டு அதனைத் துரத்தியது.

இப்படி அவமான மடைந்த அந்த வான்கோழியை மற்றொரு வான்கோழி பார்த்து, “நீ வீண் டம்பம் செய்து கொண்டாய். அதனால் உன்னைவிட மேலானவர்கள் உன்னைத் தண்டித்தார்கள். உனக்குச் சமானமானவர்கள் உன்னை இகழ்ந்தார்கள். நீ எப்பொழுதும் போல் இருந்திருப்பாயானால் இந்த அவமானம் வருமா உனக்கு?” என்று அது வெட்கமடைந்து தலை குனியும்படி இடித்துக் கூறியது.

7. சுயநலம் தீமைதரும்

ஒரு குதிரை ஒரு காட்டில் தனியே மேய்ந்து கொண்டிருந்தது. அங்கே புல் ஏராளமாய் இருந்தபடியால் அது நன்றாய்த் தின்று கொழுத்தது; வேறு எந்த மிருகமாவது அங்கே நுழைந்தால் அந்தக் குதிரை அதைத் துரத்தியடித்து விடும்.

இப்படி யிருக்கையில் அந்தக் காட்டிற்குள் புள்ளிமான் ஒன்று நுழைந்துமேய்ந்தது. அதைக் குதிரை ஓடி ஓடித் துரத்தப் பார்த்தது. மான்

துள்ளி ஓடியபடியால் குதிரைக்கு அதனைத் தொடர்ந்து துரத்த முடியவில்லை. அப்பொழுது குதிரை அவ்வழியே போன ஒருவனிடம் போய், "இது நான் மேயும் காடு. என்னுடைய காட்டில் இதோ இங்கிருக்கும் இந்த மான் வந்து மேய்ந்து என்னுடைய மேய்ச்சலை அழிக்கிறது. இதைத் துரத்திவிட்டால், உனக்கு மெத்த புண்ணியமுண்டு" என்றது.

மனிதன் ஆலோசித்துப் பார்த்து. "ஓ செய்யக்கூடும், ஆனால் உன் முதுகில் ஏறி நான் உட்கார்ந்தால்தான் அது முடியும்" என்றான். குதிரை "ஆகா அப்படியே செய்" என்றது. மனிதன் உடனே அதன்மேலேறிக்கொண்டு மானைத் துரத்துவதுபோல் குதிரையை இங்கு மங்குமாயோட்டினான்; அன்று மாலை வரையில் ஆசை தீரச் சவாரி செய்தான்; பின் தான் போய்ச் சேர வேண்டிய ஊருக்கும் அதன்மேல் சவாரி செய்து கொண்டே போய்க் கீழே இறங்கினான்.

இதற்குள் குதிரை கொழுப்பெல்லாம் அடங்கி அயர்ந்து விட்டது. மனிதன் அதனைப் பார்த்து, "கொழுப்பெடுத்த குதிரையே, ஓடு! நீ தின்பதில் இன்னொருவனுக்குக் கொஞ்சம் இடலாகாதா? இந்த இரக்கம் உனக்கில்லாமற் போயிற்றே! கொழுப்பினால் அல்லவா இந்த தருமத்தை

நீ மறந்தாய்! சை! இனி இப்படிச் செய்யாதே" என்று துரத்திவிட்டான்.

குதிரை "ஐயோ, சிறுமானுக்கு மனமிரங்கி யிருந்தால் இந்தப் பாடேன் நமக்கு வருகிறது?" என்றெண்ணிக் கொண்டு ஓர் ஓட்டத்திலே தன் காடு போய்ச் சேர்ந்தது. அன்றுமுதல் அது முன் போல் வேறு மிருகங்களுக்கு இடர் செய்யாமல் எல்லாவற்றுடனும் நட்பாயிருந்து சுகமாய் வாழ்ந்து வந்தது.

8. வீண் புகழ்ச்சிக்குச் செவிகொடாதே

ஒரு காகம் ஒரு நாள் ஒரு பலகாரக் கடையி லிருந்து ஒரு வடையைக் கொத்திக்கொண்டுபோய்

ஒரு மரத்தின்மேல் உட்கார்ந்தது. அதைப்பார்த்த ஒரு நரி அந்த வடையை அடைய எண்ணங் கொண்டது. உடனே கீழே உட்கார்ந்து மெதுவாய் மேலே பார்த்து, "ஓ காகமே! உன் அழகே அழகு! உன் இறகு பளபளப்பாய் இருக்கிறது! உன்னுடைய கழுத்தின் அழகும் மார்பின் அழகும் என் கண்களைப் பறிக்கின்றன. உன் கண்களின் காந்தியே காந்தி! இப்படியிருக்கும் நீ உன் வாயைத் திறந்து உன் குரலைக்காட்டினல் அது காதுக்கு எவ்வளவு ஆநந்தமாயிருக்கும்" என்று புகழ்ந்தது.

இந்த வீண் புகழ்ச்சியினல் சந்தோஷமடைந்த காகம் தன் குரலைக்காட்ட வாயைத்திறந்தது. வடை உடனே கீழே விழுந்தது. விழுந்ததும் நரி அதைக் கவ்விக்கொண்டு ஓடிவிட்டது. காகம், "ஐயோ, வீண் புகழ்ச்சிக்குச் செவிகொடுத்துச் சந்தோஷமடைந்தேன்; அதனல் கிடைத்த இரையை இழந்தேன்" என்று சொல்லிக்கொண்டே பறந்தது.



9. அதிக ஆசை அதிக நஷ்டம்

ஒரு நாய் ஒரு சிறு மாமிசத்துண்டை கவ்விக்கொண்டு ஒரு குளக்கரையின்மேல் ஓடியது. அதனுடைய நிழல் குளத்தில் தெரிந்தது. அதைக் கண்டதும் இன்னொரு நாய் மாமிசத் துண்டைக் கவ்விக்கொண்டு போவதாய் எண்ணி அதைப்பிடிக்க ஆசை கொண்டது. உடனே தன் வாயைத் திறந்து குளத்தில் குதிக்கப் பார்த்தது. அச்சமயம் பார்த்து ஒரு காகம் திடீரென்று பாய்ந்து, மாமிசத்துண்டைக் கொண்டுபோய் விட்டது.

நாய் "ஐயோ, நான் மூடன். அதிக ஆசைப் பட்டுக் கிடைத்ததையும் இழந்தேன். ஆம், அதிக ஆசை அதிக நஷ்டம்" என்று சொல்லிக் கொண்டு ஓடியது.

10. உபகாரத்தின் பயன்

ஒரு கிணற்றங் கரையிலிருந்த ஓர் எறும்பு தவறிக் கிணற்றில் விழுந்து விட்டது. அது அங்கிருந்து கறையேற முடியாமல் தவித்தது. இதை அந்தக் கிணற்றங்கரைமேல் ஒரு மரத்திலிருந்த ஒரு புறு கவனித்தது. அது எறும்பினிடம் இரக்கங்கொண்டு ஓர் இலையைப் பறித்து எறும்பின் பக்கத்தில் விழும்படி போட்டது. எறும்பு அந்த இலையில் மெதுவாய்த் தொற்றிக் கொண்டு கரையேறியது.

அப்பால் கொஞ்ச நேரத்திற் கெல்லாம் அங்கொரு வேடன் வில்லுடன் வந்து நின்று, அந்தப் புறுவை அடிக்கக் குறிவைத்தான். அதைக் கண்ட எறும்பு அந்த வேடனுடைய காலில் கடித்தது. அந்த வேடன் உடனே தன் வில்லைக் கீழே போட்டுவிட்டுக் குனிந்து காலைக் கையினலே தடவிக்கொண்டான். அச்சமயம் பார்த்து புறு "பிழைத்தேன்! உபகாரத்தின் பயனைக் கண்டேன்!" என்று சொல்லிக்கொண்டு ஓடிவிட்டது.

---

11. கேடுவான் கேடு நினைப்பான்

ஒரு நாயும் ஒரு சேவலும் சிநேகமாயிருந்தன. ஒருநாள் மாலைவேளையில் அவை இரண்டும் ஒரு காட்டிற்குப் போயின. பின் திரும்பும்

போது இருட்டாய்விட்டது. ஆகையினால் இரண்டும் அங்கேயே தங்கியிருந்து விடிந்ததும் ஊருக்குள்வரத் தீர்மானித்தன.

சேவல் பறந்து ஒரு மரத்தின்மேல் உட்கார்ந்து கொண்டது. நாய் அந்த மரத்தடியிலே படுத்துக்கொண்டன. இரண்டும் சற்றுநேரத்திற் கெல்லாம் தூங்கிவிட்டன. அப்பால் விடியற் கால வேளையில் சேவல் வழக்கம்போல் கூவியது.

சேவலின் கூவலைக்கேட்டு விழித்துக்கொண்ட ஒரு நரி அங்கே வந்து அதன் அழகைப் புகழ்ந்து பேசி மெதுவாய்க் கீழே வரும்படி சொல்லிற்று. சேவல் "கீழே என் நண்பனிருக்கிறான். அவனையும் எழுப்பு; இதோ வந்தேன்" என்றது. நரி மரத்தின் அருகே வந்தது. நாய் முன்பே விழித்துக்கொண்டுவிட்டபடியால் நரியைப் பிடிக்கத் தயாராயிருந்தது. ஆகையினால் அது குபீலென்று அதன்மேல் பாய்ந்து அதைப் பிடித்துக் கொண்டது.



12. உபகாரம் வீண்போகாது

ஒரு காட்டில் ஒரு சிங்கம் தன் குகையில் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தது. அதன் முதுகின்மேல் ஒரு காட்டெலி விழுந்து ஓடியது. அதனால் அந்தச் சிங்கம் விழித்துக்கொண்டு, "என் தூக்கத்தைக் கெடுத்தாயே" என்று கோபங்கொண்டு தன் முன் காலால் அந்தக் காட்டெலியை அமுக்கி நசுக்கப் பார்த்தது.

எலி பயந்து, "ஐயா, நான் ஓர் அற்பப்பிராணி. என்னைக் கொல்வது தங்களுக்குப் பெரிதா? நான் அறியாமற்செய்த பிழைக்காக என்னை மன்னித்தல் வேண்டும்!" என்று வேண்டிக் கொண்டது.

சிங்கம் அதன் மேல் இரக்கங்கொண்டு அதை விட்டுவிட்டது.

அப்பால் அந்தச் சிங்கம் ஒருநாள் அந்தக் காட்டில் உலாவியது. அப்பொழுது ஒரு வேடன் ஓரிடத்தில் விரித்திருந்த ஒரு பெரிய வலையிலே அது சிக்கிக்கொண்டது. உடனே அது பயந்து ஒரு பெருங் கர்ஜனை செய்தது. அதைக் கேட்ட அந்த எலி, "ஓ! முன் நம்மிடம் இரக்கம் பாராட்டி நம்முடைய குற்றத்தை மன்னித்து நம்மைக் காப்பாற்றிய மிருகேந்திரனல்லவா கத்துகிறது" என்றெண்ணி ஓடி வந்து பார்த்து அந்த வலையைத் தன் பல்லினால் கடித்துத் துண்டித்தது.

பின் சிங்கம் வலையிலிருந்து விடுபட்டு எலியைப் பார்த்து 'உபகாரம் வீண்போவதில்லை' என்று சொல்லிவிட்டுச் சந்தோஷமாய்ச் சென்றது.

---

13. பக்கபலத்தை இழந்ததனால் வந்த நஷ்டம்

ஒரு மலையடிவாரத்தில் இருந்த ஓர் ஊரில் ஒரு வண்ணான் வசித்துக்கொண்டிருந்தான். அவனுடைய கழுதையும் அவன் வீட்டுச் சேவலும் மலையடிவாரத்தில் ஒரு நாள் நின்றுகொண்டிருந்தன. அப்பொழுது அந்த மலையிலிருந்த சிங்கம் அந்த வழியே வந்தது. அது கழுதையைப் பார்த்ததும்

"இது நன்ருய்க் கொழுத்திருக்கிறது; இதை இன்று எனக்கு உணவாக்கிக் கொள்கிறேன்" என்று எண்ணியது.

அச்சமயத்தில் சேவல் 'கொக்கோ' என்று கூவியது. சேவல் கூவிஞல் சிங்கம் அந்த இடத்தில் இராது. அதற்கு அந்தக்குரல் பிடிக்காது. ஆகையிஞல் சேவல் கூவியதும் சிங்கம் ஓடியது. இந்தமட்டும் சேவல் நம்மைத் தப்புவித்ததே என்றெண்ணிக் கழுதை சும்மாவல்லவா இருக்கவேண்டும்? அப்படியில்லாமல் "சேவலின் குரல் கேட்டு ஓடுகிற இந்தச் சிங்கத்தை நாம் கொன்று விடக்கூடாதா? கொன்றுவிட்டால் அது நமக்குப் பெரிய புகழ்ச்சியல்லவா?" என்று எண்ணி நாலு கால் பாய்ச்சலில் சிங்கத்தைத் தொடர்ந்தோடியது.

சிங்கம் அந்தக் கழுதையை வெகு தூரம் கொண்டுபோய் விட்டது. அப்பால் திரும்பி ஒரே பாய்ச்சலில் கழுதையின் மேல்பாய்ந்து அதைக் கொன்று தின்றுவிட்டது.

---

14. முன்ஜாக்ரதை யில்லாத மூடன்

மழைக் காலத்தில் ஒருநாள் கொஞ்சம் வெயிலடித்தது. அச்சமயத்தில் ஓர் எறும்பு தான் சேர்த்து வைத்திருந்த தானியத்தை உலர்த்தியிருந்தது. ஒரு வெட்டுக்கிளி அதைப் பார்த்து,

உடனே எறும்பினிடம் போய் "நான் பசியோ டிருக்கிறேன். நீ வைத்திருக்கும் தானியத்தில் கொஞ்சம் கொடு" என்று கேட்டது.

எறும்பு, "நல்லது; கோடை காலத்திலெல்லாம் நீ என்ன செய்தாய்?" என்று கேட்டது. வெட்டுக்கிளி, "அங்கங்கே உணவு கிடைத்தது. பிரயாசையில்லாமல் பொறுக்கித் தின்று பாடிக் கொண்டிருந்தேன்" என்று சொல்லிற்று. "ஆனால் இந்த மழைக்காலமெல்லாம் நீ ஆடிக்கொண்டிரு" என்று எறும்பு கூறி, 'முன் ஜாக்கிரதை வேண்டாமா? மூடமே' என்று இகழ்ந்தனுப்பிவிட்டது.

---

15. துஷ்டனுக்கு இரங்கலாகாது

மழைக்காலத்தில் ஒருநாள் ஒரு குடியானவன் வயலில் உழுதுவிட்டு வீட்டுக்குத் திரும்பினான். அப்பொழுது குளிர்ந்தகாற்று அடித்தது. அதனுடன் மழையும் பெய்தது. அந்தக் குளிர்பொறுக்காத ஒரு சிறு பாம்பு ஓரிடத்தில் செத்ததுபோல் சுருண்டு கிடந்தது.

அந்தப் பாம்பினிடம் இரக்கங்கொண்ட குடியானவன் அதை யெடுத்துத் தன் கைக் கூடையில் வைத்துக்கொண்டு வீட்டுக்குப்போய் அதை அடுப்பிற்கருகே விட்டுவைத்தான். உஷ்ணம் ஏறியதும் அப்பாம்பு சீறியெழுந்து எல்லாரையும் கடிக்க

ஆரம்பித்தது. குடியானவன் “ துஷ்டர்களுக்கு உதவிசெய்யக் கூடாதென்பார்கள். அது சரியாய்ப் போய்விட்டது. செய்த உதவியை மறந்த உன்னை உயிருடன் விடக்கூடாது. நீ இன்னும் அநேகருக்குத் தீங்கு செய்வாய்'' என்று கூறி அதைத் தன்னுடைய கைத்தடியால் அடித்துக்கொன்று வீட்டிற்கப்பா லெறிந்து விட்டான்.

—— –

16 துஷ்டன் இருக்குமிடத்தில் இருப்பதாகாது

ஓர் ஆற்றில் ஓர் ஓநாய் ஜலம் குடித்துக் கொண்டிருந்தது. அந்த ஆறு மேற்குப் பக்கமிருந்து கிழக்கு முகமாய் ஓடியது. ஓநாய் நின்று ஜலம் குடிப்பதற்குச் சற்றுக் கிழக்கே ஓர் ஆட்டுக் குட்டி வந்து ஜலம் குடித்தது. ஓநாய் அந்த ஆட்டுக் குட்டியைப் பார்த்து விட்டது; பார்த்ததும் அதைப் பிடித்துக் கொன்று தின்ன விரும்பியது; உடனே அதைக் கொல்வதற்கு ஒரு காரணம் வேண்டுமென்று ஆலோசித்துப் பின், “அடே அற்பனே, என் நான் குடித்துக்கொண்டிருக்கும் ஜலத்தைக் கலக்குகிறாய்?” என்று கேட்டது.

ஆட்டுக்குட்டி மிகவும் வணக்கமாய், “ஐயா, நான் எப்படித் தண்ணீரைக் கலக்கமுடியும்? தாங்கள் குடித்து விட்ட மிச்சமல்லவா நான் குடிப்பது?” என்றது. ஓநாய், “அது போகட்டும்;

நீ ஒரு வருஷத்திற்கு முன்னால் வாயில் வந்தபடி யெல்லாம் என்னை வைதாயாம்; ஏன் அப்படி?" என்று கேட்டது. ஆட்டுக்குட்டி, பயத்துடன் "ஐயா, நான் பிறந்து இன்னும் ஆறுமாத மாக வில்லையே! நான் எப்படித் தங்களை ஒரு வருஷத் துக்கு முன் திட்டியிருக்கமுடியும்?" என்றது.

ஓநாய், "ஓ அப்படியா, நீ திட்டியிராவிட் டால் உன் தந்தையாவது திட்டியிருப்பான். இது நிச்சயம். அதற்கு நீ தான் உத்தரவாதி" என்று கூறிக் கோபத்துடன் அந்த ஆட்டுக்குட்டியின் மேல் பாய்ந்து அதைக்கொன்று தின்று விட்டது.

---

17. துஷ்டனுக்கு உதவி செய்வதாகாது

ஒரு காட்டில் ஓர் ஓநாய் வசித்தது. அது ஓர் ஆட்டைப்பிடித்து வயிறு உப்பத் தின்றது. அப் பொழுது அதன் தொண்டையில் ஆட்டின் எலும்பு ஒன்று மாட்டிக்கொண்டது. அதனால் அந்த ஓநாய் பெருந் துன்ப மடைந்து இங்குமங் கும் ஓடியலைந்தது; எதிர்ப்பட்டவர்களை யெல்லாம் தன் துன்பத்தை நீக்கும்படி வேண்டிக்கொண் டது; அல்லாமலும் "இந்தத் துன்பத்தைத் தீர்ப் பாயானால் உனக்கு நல்ல வெகுமதி கொடுப்பேன்" என்றும் கூறியது.

ஓநாயினிடம் இரக்கங்கொண்ட ஒரு கொக்கு

அந்த ஓநாயினிடம் போய், " நீ உட்கார்ந்து உன் வாயைத் திறந்துகொள்; நான் என்னுடைய நீண்ட மூக்கைவிட்டு உன் தொண்டையில் மாட்டிக் கொண்ட எலும்பை எடுத்துவிடுகிறேன்" என்றது. ஓநாய், " நல்லது. சந்தோஷம்! நான் உன் உபகாரத்தை மறக்கவே மாட்டேன். உனக்கு இப்பொழுது நல்ல வெகுமதியும் தருவேன்" என்று கூறி ஓரிடத்தில் வாயைத்திறந்துகொண்டு உட்கார்ந்தது.

கொக்கு அதற்கெதிரில் உட்கார்ந்து தன் நீண்ட மூக்கை அதன் தொண்டையில் விட்டு மெதுவாய் அந்த எலும்பை எடுத்தது; பின் வணக்கத்துடன் "எங்கே நீ தருவதாகச் சொன்ன வெகுமதி?" என்று கேட்டது. ஓநாய் நகைத்து, "பைத்தியமே, உன்னுடைய நீண்ட கழுத்து என் வாயில் அகப்பட்டபோதே அதனை நான் துண்டியாமல் விட்டு விட்டேனே! அது உனக்குப் பெரிய வெகுமதியாகத் தோன்றவில்லையா?" என்று கேட்டது.

கொக்கு, "பெரிய வெகுமதி! மறந்தேன்" என்று கூறிப் பின் தனக்குள், "துஷ்டனுக்கு எந்தச் சமயத்திலும் உபகாரம்செய்வது கூடாது" என்று சொல்லிக்கொண்டே ஓடிவிட்டது.

177707

18. துஷ்டனை வெல்லத் தண்ட உபாயமே சிறந்தது

ஒரு நரியும் ஒரு கழுகும் ஒரு காட்டிலே வசித்துக்கொண்டிருந்தன. அப்படி யிருக்கை யில் ஒருநாள் கழுகு அந்த நரியின் குட்டிகளில் ஒன்றை எடுத்துக்கொண்டுபோய் மரத்தின் உச் சிக் கிளையில் வைத்துக்கொண்டு தின்னப் பார்த் தது. அதைக் கண்ட நரி, தன்னால் இயன்ற வரையில் தன் குட்டியை விட்டுவிடும்படி கெஞ்சிக் கேட்டுக் கொண்டது. கழுகு: "இவ்வளவு உயர மான மரத்தின்மேலிருக்கும் நம்மை நரி என்ன செய்யும். ஒன்றும் செய்வதற்காகாது" என்று துணிவுகொண்டு குட்டியை விடாமலே இருந்தது.

நரி வெகு தந்திரமுள்ள பிராணியாகையினால் உடனே எங்கேயோ ஓடி ஒரு தீவட்டியைக் கவ் விக்கொண்டு வந்து அம்மர முழுவதையும் தீயி னால் கொளுத்தியது. கழுகு: "ஓ! இனி நாமும் நமது குஞ்சுகளும் தப்புவதற்கில்லை" என்று பயந்து நரியைப் பார்த்து, "நண்பா, எரிக்காதே! இந்தா! உன்னுடைய குட்டி" என்றுகூறி அதன் குட்டியைக் கீழே கொண்டு வந்துவிட்டுச் சென் றது.

19. நயவஞ்சகனை நம்பலாகாது

காட்டில் திரிந்து கொண்டிருந்த ஒரு நரி ஒரு கிணற்றில் தவறி விழுந்துவிட்டது. அந்தக் கிணற்றில் நரியின் வயிற்றளவே ஜலம் இருந்தது. அதிக ஜலமில்லை. ஆயினும் நரி அந்தக் கிணற்றிலிருந்து கரையேற முடியாமல் தவித்துக் கொண்டிருந்தது.

இப்படியிருக்கையில் அவ்வழியே வந்த ஓர் ஆடு கிணற்றில் தண்ணீர் குடிக்க விரும்பிக் கரையோரத்திலிருந்தபடியே அதில் எட்டிப்பார்த்தது; நரி தண்ணீரில் நிற்பதைக்கண்டு, "நண்ப, இந்தக் கிணற்று ஜலம் குடிப்பதற்கு யோக்கியமானதா?" என்று கேட்டது.

நரி, "நண்ப, ஜலம் வெகு நன்றாயிருக்கிறது. நான் வயிறு வெடிக்க ஜலம் குடித்துவிட்டேன். இன்னும் எனக்குத் திருப்தி யுண்டாகவில்லை. கீழே இறங்கிவா" என்றது. நரியினுடைய தந்திரமான பேச்சைப்பற்றிச் சந்தேகிக்காமல் ஆடு திடீரென்று கிணற்றுக்குள்ளே குதித்தது. குதித்ததும் நரி அந்த ஆட்டின்மேல் தாவியது; அங்கிருந்து இலகுவில் தாவிக் கரைக்கு வந்து சேர்ந்து, "உனக்கு நீண்ட தாடியிருக்கிறது. ஆனால் கூர்மையான புத்தியில்லை. கூர்மையான புத்தியிருக்குமானால் நீ இந்தக் கிணற்றில் குதிப்பதன் முன்பே

சிறிது ஆலோசித்திருப்பாய்" என்று கூறிவிட்டு ஓடிவிட்டது. ஆடு "அந்தோ! துஷ்டனுடைய பேச்சை நம்பியதனால் கெட்டேன்" என்று துக்கமடைந்தது. பின் அவ்வழியே வந்த ஓர் இடையன் அந்த ஆட்டைக் கரையிலேற்றி விட்டான்.

---

20. யுக்தியே சித்திதரும்

ஒருநாள் ஒரு காக்கை தாகத்தினால் வருந்தியது. ஒரு வீட்டில் முற்றத்தில் ஒரு மூலையில் ஒரு குடமிருந்தது. அதைக்கண்ட காகம், "இதில் ஜலமிருக்கும், குடிக்கலாம்" என்று அதனிடம் பறந்து உட்கார்ந்து பார்த்தது. அந்தக் குடத்தில் தண்ணீர் அடியில் கொஞ்ச மிருந்தது. அதைக் கண்டதும் காகம், "ஐயோ! 'கைக்கெட்டியது வாய்க் கெட்டவில்லை' என்கிற கதையாய் முடிந்ததே!" என்று வருத்தமுற்றது. அப்பால் அது அந்தக் குடத்தைத் தலைகீழாய்க் கவிழ்க்கவும் உடைக்கவும் பார்த்தது. ஒன்றும் அதனால் செய்ய முடியவில்லை. ஆகையினால் அது சற்று நேரம் ஆலோசித்து அங்கே பக்கத்தில் கிடந்த மணிக் கற்களைப் பொறுக்கிப் பொறுக்கி குடத்திற்குள் போட்டது. குடத்திற்குள் கற்கள் நிறையவே தண்ணீர் மேலே வந்துவிட்டது. பின் சந்தோஷமாய் ஜலம் குடித்துத் தாகந் தணிந்து சென்றது.

21. தந்திரம் எப்போதும் எல்லோரிடமும் பலிக்காது

ஒரு கழுதை ஒரு காட்டில் ஒரு சிங்கத்தினுடைய தோலைக்கண்டெடுத்தது. அப்பால் அது அந்தத்தோலைத் தன்மேலே போர்த்துக் கொண்டு எல்லா மிருகங்களையும் பயப்படுத்திக் கொண்டிருந்தது. சிங்கத்தைக் கண்டால் மற்ற மிருகங்களெல்லாம் பயப்படும். அதனால் கழுதை இப்படிப் பட்ட தந்திரம் செய்து கொண்டு பயமில்லாம லிருந்தது.

அப்படி யிருக்கையில் ஒருநாள் ஒரு நரி அந்தக் கழுதையைச் சந்தித்தது. கழுதை அதையும் பயப்படுத்தப் பார்த்தது. நரி கொஞ்சத்தில் ஏமாறாது. எல்லாரையும் ஏமாற்றக் கூடிய தந்திரம் அதற்குண்டு. அதனால் அது அந்தக் கழுதையின் குரலைக் கவனித்தது; உடனே "ஏ, கழுதே! வேஷக்கழுதே! உன்னுடைய தந்திரம் என்னிடம் பலிக்குமா? உன்னுடைய குரலை நான் கவனியாதிருந்தால் என்னையும் நீ ஏமாற்றியிருப்பாய். இல்லையா? ஜாக்ரதை! இடமறிந்து நட" என்றது.

கழுதை இதைக் கேட்டதும், "தந்திரம் எப்பொழுதும் எல்லோரிடமும் பலிக்காது. எந்தப்புற்றில் எந்தப் பாம்பிருக்குமோ; அதை யார் கண்

டது" என்று எண்ணி வெட்கமுற்று ஓடிவிட்டது.

---

22. புத்தியுடையவன் பெரியவன்

ஒரு காட்டில் ஒரு சிங்கம் ஒரு மனிதனுடன் பழகி அவனோடு சிநேகமாயிருந்தது. ஒருநாள் அவர்கள் இருவரும் உலாவுகையில் சிங்கம், "மனிதர்களைவிட நாங்கள் பலமும் தைரியமும் உடையவர்களா? எங்களைவிட மனிதர்கள் பலமும் தைரியமும் உடையவர்களா?" என்று கேட்டது.

மனிதன், "உங்களைவிட மனிதர்களே பலமும் தைரியமும் உடையவர்கள்" என்றான். சிங்கம் "இல்லை, நாங்கள் தான்" என்றது.

இப்படி இருவரும் வாக்குவாதம் செய்து கொண்டே நடந்தார்கள். கொஞ்சதூரம் போனதும் ஒரு பக்கத்தில் ஒரு சுவரில் சிங்கத்தின் கழுத்தை மனிதன் திருகிக்கொண்டிருக்கிறதுபோல் ஒரு சித்திரம் வரைந்திருந்தது. இதைக் கண்டதும் மனிதன், "நண்ப, இந்தச் சித்திரத்தைக் கவனி. நாங்கள் உங்களைவிடப் பலமும் தைரியமும் உடையவர்களல்லவா?" என்று கேட்டான்.

சிங்கம் நகைத்து, "இது நீங்கள் எழுதி வைத்துக் கொண்டது. நாங்கள் எழுதுகிறவர்களாயிருந்தால் உன்னைப்போல் பத்து மனிதர்களை

ஒரே அறையில் கீழேவீழ்த்திக்காலினால் மிதிப்பது போல் சித்திரம் எழுதியிருப்போம்" என்றது.

---

23. ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு

ஒரு பெரிய எருது ஒரு வயலின் ஓரத்திலே மேய்ந்தது. அப்பொழுது அதனுடைய நீண்ட வால் கீழே வரப்பில் புரண்டது. அதனால் அங்கிருந்த சில சிறு தவளைக்குஞ்சுகள் இறந்தன. ஒரு தவளைக்குஞ்சு தாவிக்குதித்து ஓடித்தாயாரிடம் போய், "அம்மா, நான்கு கால்களுள்ள ஒரு பெரிய மிருகம் எங்களை யெல்லாம் தன் வாலால் கொல்லு கிறது. நான் தப்பி ஓடிவந்துவிட்டேன்" என்றது.

தவளை அதைக் கேட்டதும், "அது பெரிய மிருகமா? எவ்வளவு பெரிதிருக்கும்? இவ்வளவு பெரிதிருக்குமா?" என்று குஞ்சைப் பார்த்துக் கேட்டுத் தன் உடலைக் கொஞ்சம் உப்பிக்கொண் டது. குஞ்சு, "இல்லை, இன்னும் பெரிது" என் றது. தவளை இன்னும் தன் உடலை உப்பிக் கொண்டு, "இப்படி இருக்குமா?" என்று கேட்டது. குஞ்சு, "இல்லை அம்மா, இன்னும் பெரிது" என்றது. தவளை தன் உடலை இன்னும் கொஞ்சம் உப்பிக்கொண்டு, "இப்படி இருக்குமா பார்" என் றது.

குஞ்சு, "அம்மா, நீ உன் வயிறு வெடித்துப் போகும்படி உப்பிக்கொண்டாலும், அவ்வளவு பெரிதாகமாட்டாய்!" என்றது. தவளை "என்ன இது! நம்முடைய சாமர்த்தியத்தை இவ்வளவு தூரம் காட்டியும் இது நம்பவில்லையே!" என்று ஆத்திரம் கொண்டது. உடனே மூச்சைப்பிடித்துத் தன் உடலை உப்பிக்கொண்டது. உடனே அதன் உடல் படீரென்று வெடித்தது! பின் அது இறந்து போயிற்று.

---

24. பகைவனுக்கு இடங்கொடுத்ததனால் வந்த கேடு

ஒரு வீட்டில் சில புறக்கள் வளர்ந்தன. அவைகளை வளர்க்கும் வீட்டுக்காரன் இரை பொறுக்குவதற்காகக் கூண்டைத் தினந்தோறும் திறந்துவிடுவான். அப்பொழுது அந்தப் புறக்கள், தங்கள் பகையாகிய கழுகுக்கு அஞ்சி வெளியே எங்கும் போவதில்லை. கூண்டோரத்திலேயே முற்றத்தில் இரை பொறுக்கும்.

இவைகள் இப்படிச் செய்வதனால் கழுகுக்கு இவற்றின் அருகே நெருங்க முடியாமலிருந்தது. அதனால் கழுகு ஒரு தந்திரம் செய்தது; "ஏ புறக்களே, ஏன் வெளியே வரப் பயப்படுகிறீர்கள்?

என்னை உங்களுக்கு அரசனுக்கி விடுங்கள். உங்களை நான் காப்பாற்றுகிறேன்" என்றது.

அதைக் கேட்டதும் ஒரு புரு மற்ற புருக்களைப் பார்த்து, "பகைவருக்கு இடங்கொடுப்பது கூடாது. அவன் பேச்சை நம்புவதும் ஆகாது" என்று சொல்லியது. அதன் பேச்சை மற்றப் புருக்கள் கேளாமல் கழுகைப் பார்த்து, " நீ எங்களுக்கு அரசனுயிருந்து காப்பாற்று. நீ எங்களிலும் பலமுடையவன். எதிரிகளை வெல்லும் வல்லமை உனக்குண்டு. இவைகளை அறியாமல் பேசுகிறது இத்தப்புரு. பலசாலியை அரசனுய் அடைவதுதான் பெரிது" என்று கூறின.

கழுகு அதைக் கேட்டதும் சந்தோஷமடைந்து, " நான் அரசனுயிருந்து உங்களைக் காப்பாற்றுகிறேன்" என்று கூறியது. பிறகு புருக்கள், சிறிதும் அச்சமில்லாமல் முற்றத்தை விட்டு அப்பாலே போய் இரைபொறுக்கத்தொடங்கின. கழுகு ஒவ்வொரு புருவாகப் பிடித்துப் புசித்துக் கொழுத்தது.

---

25. பகைவன் பேச்சை நம்பியதனுல் வந்தகேடு

ஒரு நாள் காட்டிலிருந்த ஓநாய்களெல்லாம் ஒன்று கூடி, " ஆடுகளைத் தந்திரமாக நாம் இரை

யாக்கிக்கொள்ள வேண்டும். இதற்கு உபாய மென்ன?" என்று பேசிக்கொண்டன. அவைகளில் ஒன்று முன் வந்து, "நான் போய் ஆடுகளைக்கண்டு, 'இனி நம் இனத்தாருக்கும் உங்களுக்கும் விரோதம் வேண்டாம். விரோதங்கொண்டு ஏன் இறக்கவேண்டும்? நாய்களாலே தான் நமக்குள் இந்த வம்பு. அவைகளை எப்படியாவது விரட்டவேண்டும்' என்று சொல்லுகிறேன். ஆடுகள் என் பேச்சை நம்பி நாய்களை விரட்டிவிடும். நாம் பிறகு நம்முடைய காரியத்தைப் பயமில்லாமல் நடத்தலாம்" என்று கூறியது.

அதைக்கேட்ட மற்ற ஓநாய்கள், "இது நல்ல உபாயம். நல்ல உபாயம்" என்று சந்தோஷமடைந்து அதை நோக்கி, "நீ போய் அப்படியே செய்துவா" என்று வேண்டிக்கொண்டன. அந்த ஓநாய் புறப்பட்டு ஆடுகளிடம் வந்து பரம சாதுவைப்போல் நடித்து; "நாங்களெல்லோரும் ஒன்று கூடினேம். இனி உங்களுக்கும் நமக்கும் பகை வேண்டாம் என்று தீர்மானித்தோம். இது நல்லதில்லையா? நமக்குள் விரோதம் ஏற்படுவது நாய்களாலேதான். அவைகளை நீங்கள் சேர்க்காதேயுங்கள்" என்றது.

ஆடுகள் அந்த ஓநாயின் பேச்சை நம்பி, "நீ சொன்னது சரி. அப்படியே சிநேகமாயிருப்போம்,

நாய்களை விரட்டிவிடுகிறோம்" என்று கூறி ஓநாயை அனுப்பிவிட்டன. அப்பால் ஆடுகள் தங்களைக் காத்துவரும் நாய்களை அழைத்து, "நீங்கள் இனி எங்களுக்குக் காவலாக இருக்கவேண்டாம். நாங்களும் ஓநாய்களும் சிநேகமாய் விட்டோம்" என்று சொல்லின.

நாய்கள், "அப்படியா நல்லது" என்று கூறிக் காவலைவிட்டுத் தங்கள் இஷ்டப்படி திரிந்தன. பட்டியைக் கவனிப்பதில்லை. இதைக்கண்ட ஓநாய்கள் சந்தோஷமடைந்து ஆடுகளைத் தங்கள் இஷ்டப்படி இரையாக்கிக்கொண்டன. எப்போதும் பகைவருடைய பேச்சை நம்புவது கூடாது.

---

26. பகைவனுக்கு உபகாரம் செய்வதாகாது

ஒரு விறகுவெட்டி ஒரு காட்டிற்குச் சென்று தன் கோடரிக்கு ஒரு பிடி கொடுக்க வேண்டுமென்று மரங்களை நோக்கிக் கேட்டான். மரங்களெல்லாம் கூடி ஆலோசித்து, "பிடிக்கு ஒரு கழி தானே கேட்கிறான். இந்த உதவி நாம் செய்யக் கூடாதா? செய்யலாம்" என்ற தீர்மானத்துக்கு வந்து, ஒரு சிறு மரத்தைக் காட்டி, 'இது உன் கோடரிக்குப் பிடிகொடுக்கும்' என்றன. அந்த மரத்தை நோக்கி, 'நீ இவனுக்கு ஒரு பிடி கொடு' என்று கட்டளையிட்டன.

விறகுவெட்டி அம்மரத்திலிருந்து ஒரு கழி யை வெட்டி இதனைத் தன் கோடரிக்குத் தக்கபடி யாக்கிக் கொண்டான்; அப்பால் எல்லா மரங்களை யும் விறகுக்காக வெட்டி மாய்க்கத் தலைப்பட்டான்.

"விறகு வெட்டியோ நமது பகைவன். பகை வன் என்பது தெரிந்திருந்தும் அவனுக்கு இரங் கிச் சிறிது இடங்கொடுத்தோம். பகைவனுக்கு இடங் கொடுக்கலாகாது என்று கூறும் பெரியார் மொழியை மறந்தோம். அதனால் வந்த கேடு இது. என்ன செய்யலாம். இனி அனுபவித் துத்தான் தீரவேண்டும்" என்று கூறிக்கொண்டு துக்கித்தன.

---

27. கெடுவான் கேடு நினைப்பான்

ஒரு நரிக்கு நாரையினிடம் சிறிது மனஸ் தாபம் ஏற்பட்டது. அதனால் அது நாரையை அவமானப்படுத்தச் சமயம் பார்த்துக் கொண் டிருந்தது; பின் ஒரு நாள் அந்த நாரையைத் தன் வீட்டிற்கு விருந்திற்கு அழைத்துச் சிறிதும் ஆழ மில்லாத ஏந்தலான ஒரு தட்டில் பாயஸம் பரி மாறியது; தனக்கும் அப்படிப்பட்ட தட்டொன் றில் பாயஸம் வைத்துக்கொண்டது. நரி அந்தப் பாயஸத்தை எளிதில் நக்கிக் குடித்துவிட்டது. ஆனால் நாரைக்குத் தன்னுடைய நீண்டகழுத்தை வளைத்து மூக்கினால் நக்கிக் குடிப்பது கஷ்டமாயி

ருந்தது. அதனுல் அது கொஞ்சம் குடிக்கிற பாவனையில் இருந்து விட்டது.

நரி அதைப் பார்த்து, "நண்ப, நீயேன் சரியாய்ச் சாப்பிடவில்லை?" இந்த விருந்து மனதுக்குப் பிடிக்கவில்லையா?" என்று கேட்டது. நாரை, "அப்படியொன்றுமில்லை. அவ்வளவுதான் சாப்பிட முடிந்தது" என்று கூறிப் பின் "நண்ப, நீ என் வீட்டுக்கு ஒருநாள் வரவேண்டும்" என்றது.

நரி, "தவருமல் வருகிறேன்" என்று கூறியது. நாரை "நாளையதினமே வரவேண்டும். தவறக்கூடாது. ஏழையின்மீது கிருபை செய்ய வேண்டும்" என்று வேண்டிக்கொண்டு சென்றது.

பின் நரி, மறுநாள் நாரை குறிப்பிட்ட இடத்திற்குப் போயிற்று. நாரை நரியை மரியாதையுடன் உட்கார வைத்துக் குறுகிய கழுத்துடன் நீண்டு உயர்ந்த ஒரு பாத்திரத்தில் பாயஸம்பரிமாறியது. தனக்கும் அப்படிப்பட்ட பாத்திரத்திலே பாயஸம் வைத்துக்கொண்டது.

நரி அந்தப் பாத்திரத்தில் எப்படித் தன் முகத்தை விட்டுக் குடிக்கும்? குடிக்க முடியாமல் மயங்கியது. நாரை தன் நீண்ட கழுத்தைவிட்டு வெகு சுளுவில் பாயஸத்தை யெல்லாம் குடித்து விட்டது. நரி, "ஓ! நாம் இவனுக்குச் செய்ததற்காக நமக்கு இவன் இம்மாதிரிசெய்து நம்மை அவ

மானப் படுத்துகிறான். இனி இங்கிருக்கப்படாது" என்று நினைத்து ஓட்டம் பிடித்தது.

நாரை, "பாயஸம் நன்றாயில்லையோ! ஏன் ஓடுகிறாய் நண்பா!" என்று கூவிச் சிரித்தது.

---

28. பொய்யும் பொறுமையும்

ஒருவன் ஓர் ஆற்றங்கரையில் மரம் வெட்டிக் கொண்டிருந்தான். அவனுடைய கோடரி தவறி ஆற்றில் விழுந்து விட்டது. அவன் நீந்தத் தெரியாதவன்; ஆகையினால் ஆற்றில் இறங்கித் தேடப் பயப்பட்டான். அவன் தினந்தோறும் விறகு வெட்டி விற்று ஜீவனம் செய்யும் ஏழை; பரமசாது. அவனுக்கு அந்தத் தொழில் தான் தெரியும். தன்னுடைய பிழைப்பிற்கு ஆதாரமா யிருந்த கோடரி ஆற்றில் விழுந்துவிடவே, அவன் துக்கப்பட்டு அழுதான்.

அந்த ஆற்றில் ஒரு தெய்வமிருந்தது. அது அவன்மீது இரக்கங்கொண்டு ஒரு தங்கக்கோடரி யுடன் வெளியே வந்து, "அப்பனே, இது உன்னுடையதா?" என்று கேட்டது. அவன் "இது என்னுடையதல்ல" என்றான். பிறகு அந்தத் தெய்வம் ஒரு வெள்ளிக் கோடரியைக் கொண்டு வந்து காட்டியது. விறகுவெட்டி, "இதுவும் என்னுடையதல்ல" என்று சொல்லிவிட்டான். அப்

பால் தெய்வம் அவனுடைய இரும்புக் கோடரி யையே கொண்டுவந்து காட்டியது. விறகு வெட்டி "இதுதான் என்னுடையது" என்றான்.

அந்தத் தெய்வம் அவன் உண்மை பேசிய தைக்கண்டு சந்தோஷமடைந்து, அவனுக்கு அவ னுடைய கோடரியைக் கொடுத்தது மல்லாமல் தங் கம், வெள்ளி இரண்டு கோடரிகளையும் கொடுத்துச் சென்றது.

விறகு வெட்டி பிறகு சந்தோஷமாய் விறகு வெட்டி எடுத்துக்கொண்டு ஊருக்குள்போய்த் தன் நண்பர்களிடத்திலெல்லாம் இந்த அதிசயத்தைச் சொன்னான். அவர்களில் ஒருவன் தானும் அப் படிப்பட்ட பாக்கியம் அடைய எண்ணி மறுநாள் கோடரியை எடுத்துக்கொண்டு காட்டிற்குப் போய் அதே இடத்தில் விறகு வெட்டினான்; பிறகு வேண்டு மென்றே கோடரியை நழுவவிட்டு ஆற் றங்கரையில் உட்கார்ந்து பொய்யழுகை அழுதான்.

முன்போல் அந்தத் தெய்வம் ஒரு தங்கக்கோ டரியுடன் அவன் முன்னே தோன்றி, "இது உன்னுடையது தானா?" என்று கேட்டது. அவன் "ஆம்; என்னுடையதுதான்" என்று பொய் சொன்னான். பொய் சொன்னது மல்லாமல் ஆவ லோடு அதைப் பிடுங்கப் போனான். தெய்வம், "நீ பொய்யன். பொறாமைக்காரன். உனக்கு உன்

ட்கோடரியும் கிட்டாது" என்று சொல்லி மறைந்து விட்டது.

அவன் "ஐயோ, பொருமையும் பொய்யும் நம்மைக் கெடுத்தன. இன்றுமுதல் அவற்றை விட்டுவிட வேண்டும்" என்று சொல்லிக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்து தான் இப்படி வீணே நம்பி யதை ஒருவரோடும் சொல்லாமல் தன் வேலை யைக் கவனிக்கலானுன்.

---

29. பொய் முடிவில் கேட்டைத்தரும்

ஆடுமேய்க்கும் இடைப்பையன் ஒருவன் ஒரு நாள் "ஐயோ! கோநாய் கோநாய்" என்று கத்தி ஞன். அவன் கத்துவதைக்கேட்டு அருகில் தத்தம் காட்டில் வேலை செய்து கொண்டிருந்த குடியான வர்களெல்லாம் ஓடிவந்தார்கள். பையன், "உங்களை ஏமாற்றிவிட்டேன்"—என்று கூறிக் கைகொட்டி நகைத்தான். பின்னெருநாளும் கோநாய் வந்து விட்டதென்று பொய்யாகக்கத்திக்குடியானவர்களை ஏமாற்றிவிட்டான். பின் இன்னெரு நாள் நிச்சய மாகவே கோநாய் வந்துவிட்டது. அப்பொழுது முன்போல் கத்திஞன். குடியானவர்கள், மூடப் பயல் பொய் சொல்லுகிருன் என்று தீர்மானித்து ஒருவரும் அவனுக்கு உதவி செய்யப் போக வில்லை. வந்த கோநாய் சும்மா இருக்குமா? ஆடு

களை வேண்டியமட்டும் கொன்று விழுங்கிவிட்டு ஓடிவிட்டது. அப்பால் பையன் "நாம் முன் பொய் சொல்லி ஏமாற்றினேமல்லவா" அதனுல் வந்த கேடு—என்று அறிந்து "இனி எந்தக்காரணத்தை முன்னிட்டும் பொய் சொல்வதாகாது" என்று தீர்மானங்கொண்டான்.

---

30. பிறர் உதவி விரும்பல் பேதைமையாகும்

ஒரு வயலிலே ஒரு வானம்பாடி தன் குஞ்சுகளுடன் வசித்துக்கொண்டு இருந்தது. குடியானவன் அந்த வயலில் நெல் விதைத்துப் பயிர் செய்திருந்தான். பயிர்கள் நன்ருய் வளர்ந்து கதிர்கள் விட்டிருந்தன. பின் கொஞ்ச நாளில் கதிர்கள் அறுவடை செய்யும்படியாய் முதிர்ந்து வளர்ந்தன.

அதைக்கண்டதும் வானப்பாடி "இன்னும் கொஞ்ச நாளில் குடியானவர்கள் விளைச்சலை அறுவடை செய்ய வருவார்கள்" என்று தெரிந்து கொண்டது. ஆகையினுல் அது தன்கூட்டைவிட்டு வெளியே இறைதேடப் போகும் போதெல்லாம் தன் குஞ்சுகளைப் பார்த்து, "நான் இல்லாத வேளையில் இங்கே என்ன நடந்தாலும் கவனித்துக் கொண்டிருங்கள்; நான் வந்ததும் என்னுடன் சொல்லுங்கள்" என்று சொல்லிவிட்டுப்போய்க் கொண்டிருந்தது.

அப்படி ஒருநாள் வானம்பாடி இரைதேடப் போனபின், கொஞ்ச நேரத்திற்கெல்லாம் வயலுக் குச்சொந்தக்காரன், தன் மகனுடன் அங்கே வந் தான் ; வந்ததும் வயலைப் பார்த்தான். “பயிர் நன் ருய் விளைந்திருக்கிறது. இது அறுவடை செய் யச் சரியான காலம். நாம் பக்கத்து வீட்டுக்காரரில் யாரையாவது கூட்டிக் கொண்டுவந்து சீக்கிரம் அறுக்கலாம்” என்று தன் மகனிடம் சொல்லிக் கொண்டிருந்து கொஞ்ச நேரத்திற்கெல்லாம் வீட் டிற்குப் போய்விட்டான்.

அவன் வயலைவிட்டுப் புறப்பட்டுப் போன தும் வானம்பாடி இரை தேடிக்கொண்டு கூட் டிற்கு வந்தது. குஞ்சுகள் அங்கே நடந்ததை அதனிடம் சொல்லின. அதைக்கேட்டதும் வான ம்பாடி “ஓ, அவன் பக்கத்து வீட்டுக்காரனுடைய துணையைத் தேடுகிருன். ஆகையினல் இந்தவயல் அறுவடையாகக் கொஞ்ச நாட்கள் செல்லும். பக்கத்து வீட்டுக்காரன் தனக்கு ஒழிந்த நேரத்தில் தானே வருவான். ஆகையினல், இப்பொழுது அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை” என்றது.

மறுநாள் வானம்பாடி வழக்கம்போல் வெளியே போயிற்று. அது புறப்பட்டுப்போன கொஞ்ச நேரத்திற் கெல்லாம் குடியானவன் தன் மகனு டன் வயலுக்கு வந்தான் ; வயலை நாலாபக்கமும் சுற்றிப் பார்த்தான். “மகனே, நாளையதினம்

நமது சொந்தக்காரர்களை அழைத்து வருவோம். பக்கத்து வீட்டார் தமக்கு ஒழிவு கிடைத்த போது தானே வருவார்கள்" என்றான். பின் இருவரும் வீட்டுக்குச் சென்றார்கள்.

இதைப் பறவைக் குஞ்சுகள் கேட்டுக் கொண்டிருந்தன; தாய்ப்பறவை வந்ததும், குடியானவன் தன் மகனிடம் சொன்னதை விவரமாய்ச் சொல்லின. வானம்பாடி "இப்பொழுதும் நமக்குப் பயமில்லை. எல்லோருக்கும் அறுப்பு வேலை இருக்கும் காலமிது. ஆகையினால் ஒவ்வொருவரும் தங்கள் வேலையை முடித்து விட்டுத்தான் இன்னொருவனுக்கு உதவி செய்ய முன் வருவார்கள். அதனால் கொஞ்சம் தாமத மேற்படும்" என்றது.

அடுத்த நாள் வழக்கம்போல் வானம்பாடி வெளியே போயிற்று. குடியானவன் தன் மகனுடன் அன்றைய தினமும் வயலுக்கு வந்தான்; வந்து வயலைப் பார்த்ததும் மகனை அழைத்து, "ஒருவரை நம்பினால் நமக்குக் காரியம் நடக்காது. நாமே நம்முடைய காரியத்தைச் செய்தல் வேண்டும். அப்பொழுதுதான் காரியம் முடியும். ஆகையினால் நாமிருவரும் அதிகாலையில் வந்து அறுவடை தொடங்குவோம்" என்று சொன்னான்.

மகனும் "அப்படியே செய்வோம். நமது காரியத்தை நாம் கவனிப்பதுதான் நல்லது. பிறர்

உதவியை எதிர்பார்ப்பது பேதமை" என்று கூறினான். பின் கொஞ்சநேரத்திற் கெல்லாம் இருவரும் வீட்டிற்குப் போய் விட்டார்கள்.

இதைக்கேட்டுக் கொண்டிருந்த குஞ்சுகள் தாய்ப்பறவை வந்ததும் அதனிடம் கூறின. வானம்பாடி, "இனிமேல் நாமிங்கே ஒரு நிமிஷங் கூடத் தாமதிப்பதற்காகாது. புறப்பட்டு விடவேண்டும். சொந்தக்காரன், பிறர் உதவியைப் பாராமல் தன் வேலையைக் கவனிக்கிறானல்லவா ? இனி வேலை தடைப்படாது" என்று சொல்லி அப்பொழுதே குஞ்சுகளுடன் அந்த வயலை விட்டுப் புறப்பட்டு வேறொரு வயலுக்குப் போய்விட்டது.

---

32. தன் முயற்சியே தனக்குத் துணையாம்

ஒருவன் ஒரு காட்டுவழியில் பாரவண்டியை ஓட்டிக்கொண்டு போனான். வண்டி நெருக்கமானதும் சேறு நிறைந்ததுமான ஒரு வழியில் போகும்போது ஓரிடத்தில் சக்கரங்கள் சேற்றில் பதிந்துகொண்டன. மாடுகள் இழுக்க முடியாமல் தவித்தன. வண்டிக்காரன், "தெய்வமே, வண்டியை மீட்டுத்தரவேண்டும்" என்று தெய்வத்தை வேண்டிக் கொண்டான். தெய்வம் அப்பொழுது அவன் முன் தோன்றி, "மூடா, உன் தோளைச் சக்கரத்திற் கொடுத்துத் தள்ளு. ஒரு பிரயத்தனமும் செய்யாமலிருந்தால் காரியம் நிறைவேறுமா ?

நிறைவேறுது. தனக்குத்தான் ஒத்தாசை செய்கிறவனுக்கும் முயற்சியுடையவனுக்குந்தான் தெய்வம் உதவிசெய்யும்" என்று நற்போதனை யொன்று செய்துவிட்டுப் போனது.

---

32. விடாமுயற்சியே வெற்றிதரும்

ஒருநாள் ஒருமுயல் ஓர் ஆமையைக்கண்டது. முயல், ஆமை மந்தமாய் நடப்பதைப் பார்த்துப் பரிகாசம் செய்தது. அதுகண்ட ஆமை, "வீண் பரிகாசம் செய்யாதே! நாமிருவரும் ஓரிடத்திற்குப் போய்ச் சேருவதென்று வைத்துக்கொண்டு இரண்டு பேரும் சேர்ந்தாற்போல் ஒரே நேரத்திற் புறப்படுவோம். யார் அந்த இடத்துக்கு முன்னே போய்ச் சேருகிறார்களென்று பார்ப்போம். அதற்கு மேல் உன் நடையின் வேகமும் என் நடையின் மந்தமும் தெரியும்" என்றது.

முயல் அப்படியானால் "இன்றே அந்தப்பந்தயத்தை வைத்துக்கொள்வோம்" என்றது. ஆமை அதற்கு இணங்கியது. பின் இரண்டும் இன்ன இடத்திற்குப்போய்ச் சேருவதென்று ஓர் இடத்தைக் குறிப்பிட்டுக் கொண்டு சேர்ந்தாற்போல்புறப்பட்டன. முயல் தாவிக் குதித்து வேகமாய் ஓடி ஓரிடத்தில் நின்று கொண்டு ஆமை வருகிறதோ என்று பார்த்தது. ஆமை கண்ணுக்குத் தென்படவில்லை. ஆகவே முயல், "அது அவ்விடம்

வந்து சேர வெகு நேரமாகும். நாம் அதற்குள் கொஞ்சம் தூங்குவோம். பிறகு எழுந்து இரண்டொருதாவில் அவ்விடம் போய்ச் சேர்ந்துவிடுவோம்" என்றெண்ணிப் படுத்துத் தூங்கியது.

ஆமை புறப்பட்டது முதல் ஒரே நடையாய்ச் சிறிதும் தாமதியாமல் நடந்து குறித்த இடத்திற்குப் போய்ச்சேர்ந்து விட்டது. பின் முயல் எழுந்து பார்த்து, "சை! ஆமை இன்னும் இங்கேகூடவரவில்லை என்பது திண்ணம்" என்றெண்ணிப் பெருமூச் செறிந்தது; "இது நம்முடன் எந்த தைரியத்தைக் கொண்டு பந்தயம் போட்டது. ஆச்சரியம்!" என்று சிரித்துக் கொண்டே தாவிக் குதித்தோடி குறித்த இடத்திற்குப் போயிற்று.

அங்கே ஆமையைக்கண்டதும் முயல் திடுக்கிட்டு "அடபயலே! நீ எப்படி வந்தாய் இங்கே எனக்கு முன்?" என்று கேட்டது. ஆமை "என் காலடிகொண்டு நடந்துதான் வந்தேன்! உன்னைப் போல் தாவிக்குதித்து வரவில்லை" என்றது. முயல், "நாம் மோசம் போனோம். வழியில் சோம்பலாய்ப்படுத்து அலக்ஷியமாய்த் தூங்கியது தவறு. இது இடைவிடாமல் காரியத்திலேயே கண்ணுயிருந்திருக்கிறது. 'முயற்சியுடையவன் இகழ்ச்சியடையான்' என்பது தெரிந்தது" என்று முணுமுணுத்துக்கொண்டே ஓடிவிட்டது.

33. தன் கடமையைச் செய்பவனே பெருமை யடைவான்

ஒரு சமயம் ஒருவனுடைய வயிற்றைப் பார்த்து அவனுடைய மற்ற அவயவங்களெல்லாம் "வயிறே! நீ சும்மாவிருக்கிறாய். நாங்கள் உனக்காகவேலைசெய்து கஷ்டப்படுகிறோம். இது தகுமா!" என்று சொல்லிவிட்டு எல்லாம் சும்மா இருந்து விட்டன.

கைகள் உணவை எடுத்து வாய்க்குள்ளே போட மறுத்து விட்டன. வாய் உணவை ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று சொல்லிவிட்டது. பற்கள் மெல்ல மறுத்து விட்டன. கால்களும் இருந்த இடத்தைவிட்டு அசையவில்லை.

இப்படியாகவே அந்த மனிதன் கொஞ்ச நாட்களிலே மெலிந்து போனான். கைகால்கள் முதலிய அவயவங்க ளெல்லாம் வலுக்குறைந்து துவண்டு போயின. இப்பொழுது அவைகள் "ஓ! வயிறு வெளிப்பார்வைக்கு உபயோகமில்லாததாகத் தெரிந்தபோதிலும், அது இல்லாவிட்டால் நம்முடைய ஆட்டமெல்லாம் ஒடுங்கிவிடும். இது நிச்சயம். ஆகையால் வயிற்றுக்கு நாம் ஊழியம் செய்யவேண்டியதும் அது நம்மைக் காப்பாற்ற வேண்டியதும் நியாயந்தான்" என்று உணர்ந்தன.



34. தனக்குக் கிட்டாததைத் தாழ்ந்ததென்று வெறுப்பது உலக வழக்கம்

ஒரு திராக்ஷைத் தோட்டத்தில் திராக்ஷைப் பழங்கள் பழுத்திருந்தன. அப்பொழுது ஒரு நரி அந்தத்தோட்டத்தில் நுழைந்தது. திராக்ஷைக் கொடிகளில் பழங்கள் குலேகுலேயாய்ப் பழுத்துத் தொங்கின. அவைகளைக் கண்டதும் நரிக்கு அதைப்பறித்துத் தின்ன ஆசை யுண்டாயிற்று. அதன் நாக்கில் ஜலம் ஊறியது. பின் அது தன்னால் எவ்வளவு உயரம் தாவிக்குதிக்க இயலுமோ அவ்வளவு உயரம் குதித்துக் குதித்துப் பழத்தைப் பறிக்கப் பார்த்தது; களைப்படையும் வரையில் வெகுநேரம் குதித்தது. அது செய்த பிரயத்தி

னங்களெல்லாம் வீணாயின. பின் அது, " இந்த திராக்ஷை புளிக்கும். இது வேண்டாம் எனக்கு" என்று கூறிக்கொண்டே ஓடிவிட்டது.

---

35. சுயேச்சையான வாழ்வே வாழ்வு

நாட்டுப்புறச் சுண்டெலி ஒன்றும் நகரத்துச் சுண்டெலி ஒன்றும் வெகு நாட்களாய்ச் சிநேகமாயிருந்தன. ஒரு நாள் நாட்டுப்புறச் சுண்டெலி நகரச் சுண்டெலியைத் தன் ஊருக்கு அழைத்து வந்து தானிய வகைகளெல்லாம் கொடுத்து நல்ல விருந்து செய்வித்தது. அதுகண்ட நகரச்சுண்டெலி, நாட்டுப்புறச் சுண்டெலியைப் பார்த்து, " நண்ப, நீ இந்தச் சிறுவளையில் வசித்துக்கொண்டிருப்பது எனக்குப் பிடிக்கவில்லை. நீ என்னுடன் வந்து என் வாழ்க்கையின் மேன்மையும் நான் உண்ணும் உணவையும் பார் " என்று கூறி நகரத்துக்கு அழைத்தது. நாட்டுப்புறச் சுண்டெலி அதனுடன் செல்லச் சம்மதித்தது.

பின் நகரத்துச் சுண்டெலி, அதை அழைத்துக்கொண்டு நகரத்தில் தான் வசித்த ஒரு பெரிய வீட்டிற் பிரவேசித்தது. அப்பொழுது நடுராத்திரியாதலால் அந்த வீட்டில் எல்லோரும் நித்திரை போய்விட்டனர். அன்றையதினம் அந்த வீட்டில் ஒரு பெரிய விருந்து நடந்தபடியால் தின்

பண்டங்கள் பல செய்திருந்தனர். அவைகளில் விருந்தினர் தின்னவைபோக மீந்தவை சிதறிக் கிடந்தன. நகர எலி, அவைகளை நாட்டுப்புற எலிக்குக் காட்டி, " இவைகளையெல்லாம் வயிறுரப் புசி. இவைகள் உனக்குக் கிடைக்கக் கூடியவைக ளல்லவே" என்று கூறிற்று. நாட்டுப்புற எலி சந்தோஷத்துடன் புசிக்கத் தொடங்கியது.

இந்தச் சமயத்தில் ஒரு விருந்தாளி தூக்கத்தி லிருந்து விழித்துக்கொண்டு எழுந்திருந்து அப் பக்கமாய் வந்தான். எலிகளிரண்டும் பயந்து ஓடி ஒரு மூலையில் பதுங்கிக் கொண்டன. அப்பொழுது நாய் வள்வள் என்று குலைத்தது. எலிகள் பின்னும் அதிகமாக பயமடைந்தன. பின் அந்த அரவமடங்கியதும் இரண்டும் வெளியே வந்தன. அப்பொழுது நாட்டுப்புறஎலி; "அண்ணு! இந்த வாழ்க்கை உனக்குத்தான் பிடிக்கும். எனக்குப் பிடிக்காது. அஞ்சி நடுங்கி அடிமையைப்போலி ருந்துகொண்டு உயர்ந்த தின்பண்டங்களைத் தின்று வயிறு வளர்ப்பதைவிட, சுயேச்சையாயிருந்து கொண்டு தானியவகைகளை உண்டு வாழ்வது கண் ணியமல்லவா?" என்று கூறிவிட்டு உடனே புறப் பட்டுச் சென்றது.

36. சுதந்தர வாழ்வே வாழ்வு

ஒரு நாய் தான் வசித்த ஊரின் அருகிலிருந்த ஒரு காட்டிற்கு ஒரு நாள் சென்றது. அப்பொழுது இராத்திரி வேளை. ஆனால் நல்ல நிலா வீசுகிறது. அந்த நாயைக் கோநாய் ஒன்று கண்டது. இரண்டும் ஒன்றை ஒன்று க்ஷேமம் விசாரித்துக் கொண்டன. அப்பொழுது கோநாய் நாயைப் பார்த்து; "நீ நன்றாய்த் திடமாயிருக்கிறாயே! நல்ல உணவு கிடைக்கிறது போலிருக்கிறது உனக்கு?" என்று கேட்டது.

கோநாய் உடல் வற்றிப் பார்க்க விகாரமாய் இருந்தது. நாய் அதைப் பார்த்து, "நான் வேலை செய்கிறேன். நல்ல உணவு கிடைக்கிறது. உண்கிறேன். நீ வேண்டுமானால் என்னுடன் வா. நான் செய்யும் வேலையை நீயும் செய். உனக்கு நல்ல உணவு கிடைக்கும்" என்று சொல்லிற்று.

கோநாய் "அப்படியேயாகட்டும்; உன்னுடன் வந்து நீ காட்டும் வேலையைச் செய்கிறேன்" என்றது. நாய் அதை அழைத்துக்கொண்டு ஊரை நோக்கி வந்தது. வரும்போது நாயின் கழுத்தில் தோல்பட்டை கட்டியிருப்பதைக் கோநாய் கண்டது. கண்டதும்; "நண்ப, இது என்ன? உன் கழுத்தில் இதை ஏன் கட்டியிருக்கிறது?" என்று கேட்டது.

177707

நாய் சொல்லத் தயங்கியது. கோநாய், "நான் தெரிந்துகொண்டேன். உன்னைப் பிடித்துக் கட்டி வைப்பார்கள் போலிருக்கிறது. ஆகையினால் நீ பிறருக்குக் கட்டுப்பட்டு நடக்கிறவன். உன் இஷ்டப்படி நடக்கமுடியாதவன். அது என்ன வாழ்வு? சுதந்தரமில்லாத வாழ்வு ஒரு வாழ்வா? எனக்குப் பிடிக்கவில்லை. நான் காடு காடாய் மனம்போனபடி அலைவேன். மனம்போனபடி உறங்குவேன். இஷ்டப்பட்டபோது உண்பேன். உனக்கில்லை இந்த மேன்மை. பிறரிடத்தில் ஊழியனுயிருந்து அவனிட்ட வேலையைச் செய்து உடல் கொழுக்கத் தின்பதைவிடப் பட்டினி கிடக்கலாமே" என்று சொல்லி விட்டுக் காட்டை நோக்கி ஓடிவிட்டது.

---

37. இயற்கைக்குணம் மாறுவதரிது

ஒரு வீட்டில் ஒரு பூனையிருந்தது. அந்தப் பூனை வெகு அழகாயிருந்தது. நன்ருய்க் கொழுத்தும் இருந்தது. ஒருநாள் அது அவ்வீட்டுக்குவந்த அழகிய வாலிபனைக் கண்டு அவன்மேல் ஆசை கொண்டது. பூனை எப்படி மானிடனை அடைய முடியும்? முடியாதாகையினுலே தன்னை ஓர் அழகிய பெண்ணுக மாற்ற வேண்டுமென்று தெய்வத்தை நோக்கித் தவமிருந்தது.

தெய்வம் அதனுடைய தபசுக்கு இரங்கி அதனை ஒரு பெண்ணாக மாற்றியது. பின் அப்பெண் அந்த வாலிபனைக்கண்டு தான் அவன்மேல் காதல் கொண்டிருப்பதாகத் தெரிவித்தாள். வாலிபன் அந்தப் பெண்ணை ஏற்றுக்கொண்டு தன் வீட்டிற்கு அழைத்துப் போனான்.

இருவரும் மனமகிழ்ச்சியோ டிருக்கையில் ஒரு நாள் அவர்களின் முன் ஒரு சுண்டெலி ஓடியது. மானிடப்பெண் ரூபமடைந்த பூனை அதைக் கண்டதும் இருந்த இடம் விட்டுத் திடீரென்று குதித்து எலியைப பிடிக்கப் பாய்ந்தாள். வாலிபன் அதைக் கண்டதும், அவள் கரத்தை இறுகப் பிடித்துக்கொண்டு; "பெண்ணே! நீ யார்? உண்மையைச் சொல். நீ எலியின்மேல் ஆவல் கொண்டு பிடிக்கப் பாய்ந்த படியால் உன்மேல் சந்தேகங் கொள்கிறேன்" என்றான்.

அப்பெண், தன்னுடைய வரலாற்றை ஒளியாமல் சொல்லிவிட்டது. அதன்பின் வாலிபன், "நல்லது, நீ தெய்வத்தின் திருவருளால் மானிட உருவம் அடைந்தாய். ஆனால் உன்னுடைய இயற்கைக்குணம் மாறவில்லை. ஆகையினால் உன்னை நான் நம்புவதற்கில்லை. நீ உனக்கு வேண்டியவைகளைப் பெற்றுக்கொண்டு வீட்டை விட்டு ஓடிவிடு" என்று கண்டித்தான்.

அந்தப்பெண் "ஆ தெய்வமே! இப்படியா முடியவேண்டும் என் ஆசை!" என்று துக்கித்தது. தெய்வம், "உன்னை உன் வேண்டுகோளுக்கிணங்கி ஒரு மானிடப் பெண்ணாக மாற்றினேன். நீ அந்த உயர்ந்த பிறவியை யடைந்தும் உன்னுடைய அற்பகுணத்தை விடவில்லை. ஆகையினால் நீ முன்போல் பூனையாகவே இரு" என்று கூறி மறைந்தது. பிறகு அப்பெண் உடனே பூனையாய் விட்டாள்.

---

38. தகாததை விரும்பினால் தண்டனை கிடைக்கும்

ஒரு காட்டில் ஒரு குடியானவன் வசித்தான். அவனுக்கு ஒரு பெண் இருந்தாள். அந்தப் பெண் வெகு அழகாய் இராஜகுமாரத்தியைப் போலிருந்தாள். ஒரு நாள் ஒரு சிங்கம் அவளைக் கண்டுவிட்டது. அந்தச் சிங்கத்திற்கு அந்தப் பெண்ணிடம் ஆசையுண்டாயிற்று. ஆகையினால் அது அவளுடைய தகப்பனாராகிய குடியானவனிடம் போய், "உன் பெண்ணை எனக்குக் கலியாணம் செய்து கொடு. நான் உன் பெண்ணை விரும்புகிறேன்" என்றது. முதலிற் குடியானவன் மறுத்தான். அப்பால் சிங்கம் பயமுறுத்தியது. அதன் பின் குடியானவன், அந்தச் சிங்கத்தை யுக்தியினால் வெல்ல உபாயந்தேடிக்கொண்டு அதை அழைத்து

“ நான் உனக்குப் பெண் கொடுக்கிறேன். அதனல் எனக்குக் கௌரவம் உண்டு. இப்பொழுது தான் தெரிந்து கொண்டேன். ஆனல் நீ ஒரு காரியம் செய்யவேண்டும் ” என்ருன்.

சிங்கம், “ அது என்ன சொல்லு ; செய்கிறேன் ” என்றது. குடியானவன், “ உன்னுடைய பெரிய பற்களையும் நீண்ட நகங்களையும் கண்டு என் பெண் பயப்படுகிருள். நீ அவைகளை வெட்டிவிடவேண்டும் ” என்ருன். பெண்ணசை கொண்ட சிங்கம் மூடத்தனமாய் “அப்படியே செய்கிறேன் ” என்றது.

பின் குடியானவன், அதனுடைய பற்களை வெட்டி நகங்களையும் அறுத்தெறிந்தான். சிங்கம், “ இப்பொழுது என்ன சொல்லுகிருய் ?” என்று கேட்டது. குடியானவன், “ இப்பொழுது நீ கிழவன். ஆயுதங்களை இழந்தவன். வீரமில்லாதவன். உன்னை யார் இலக்ஷியம் பண்ணுவார்கள் ? பூனையிலும் சின்னவன் நீ! ஓடு இவ்விடத்தை விட்டு, நின்ருல் அடிவிழும் ” என்று கூறி ஒரு பெரிய தடியை எடுத்துக்கொண்டு வந்தான்.

சிங்கம் என்ன செய்யும்? ஒன்றும் செய்ய இயலாது; குடியானவனுக்குப் பயந்து “ போதும் பெண் ஆசை! போதும்! ” என்று சொல்லிக் கொண்டே ஓடிவிட்டது.

---

39. கீழ்ப்படிதலுள்ளவன் மேன்மையடைவான்

ஓர் ஆற்றங்கரையில் ஒரு பெரிய வேப்பமரமிருந்தது. அங்கே நாணற்புதர்களும் இருந்தன. ஒரு நாள் ஒரு பெரிய காற்றடித்தது. நாணல் அந்தக் காற்றில் தலைவணங்கித் தாழ்ந்து தாழ்ந்து எழுந்தது. வேப்பமரம் ஸ்தம்பமாய் நின்றபடியால் வேரோடு கீழே விழுந்தது. விழுந்ததும் அம்மரத்தை ஆறு அடித்துக்கொண்டுபோயிற்று. அப்பொழுது வேப்பமரம்: "என்னுடைய ஒரு குச்சிக்குச் சமானமற்ற அற்ப நாணல் இந்தக் காற்றுக்குத் தப்பித்துக் கொண்டிருக்கிறது. நான் விழுந்துவிட்டேனே" என்று அதிசயித்தது.

17770 அது கண்ட நாணல்: "வேப்பே! நீ வீம்பாய் ஸ்தம்பம்போல் நின்றாய். உன்னைவிட பலமுடையதல்லவா காற்று? அதனிடம் நீ தாழ்ந்து போயிருந்தால் உனக்கு அழிவு நேர்ந்திராது. தாழ்ந்து நிற்பார் வாழ்ந்து நிற்பார். இது தெரியாதா! நாங்கள் காற்று வீசும்போதெல்லாம் வளைந்து வளைந்து கொடுத்துத் தப்பினோம்" என்றது.

The Kabeer Printing Works, Triplicane, Madras.

சிறுவர்க்கேற்ற நூல்கள்.

		ரூ.	அ.	பை.
1.	ஆஸ்திகமத உபாக்யானம்: 1-ம் பாகம் வரகவி - சுப்பிரமண்ய பாரதி இயற்றியது	0	6	0
2.	ஆஸ்திகமத உபாக்யானம்: 2-ம் பாகம் வரகவி - சுப்பிரமண்ய பாரதி இயற்றியது	0	6	0
3.	பாகவத பால பாடம்: செம்பூர் வித்துவான் - ஆறுமுகஞ்சேர்வை இயற்றியது	0	6	0
4.	ஈஸாப் இயற்றிய நீதிக் கதைகள்: 7 சித்திரப்படங்களுடன் ...	0	3	0
5.	ஈஸாப் இயற்றிய நீதிக் கதைகள்: 2-ம் பாகம்	0	4	0
6.	பாலர் இலக்கணம்	0	3	0
7.	ராமதாஸ்: D. நடராஜன் B.A., அவர்கள் எழுதியது	0	4	0

லலிதா விலாச புஸ்தகசாலை

திருவல்லிக்கேணி : சென்னை

RTZ/106